


**09. 07. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி நமீபியா நாட்டு அதிபர் நெடும்போ உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

2. அடித்தட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கூட்டுறவு துறையை மேம்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. மத்திய தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அழைப்பு விடுத்துள்ள வேலை நிறுத்தத்திற்கு தமிழகத்தில் போதிய ஆதரவு காணப்படவில்லை.

4. மாணவர்கள் சமூக அக்கறையுடனும், தன்னம்பிக்கையுடனும் திகழவேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5. இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான 4-வது 20-20 கிரிக்கெட் போட்டி **Manchester**-இல் இன்று நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி நமீபியா நாட்டு அதிபர் நெடும்போ உடன் விண்ட்ஹோக் நகரில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

முன்னதாக விண்ட்ஹோக் விமான நிலையத்தை சென்றடைந்த பிரதமருக்கு அந்நாட்டின் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து பிரதமர் அங்குள்ள ஹில்டன் ஹோட்டலுக்கு அவர் சென்றடைந்த போது இந்திய வம்சாவளியினர் அவரை ஆரவாரத்துடனும், மகிழ்ச்சியுடனும் வரவேற்றனர்.

பாரம்பரிய கர்பா நடனத்துடன் பிரதமரை கவுரவிக்கும் வகையில் சிறப்பு யோகா நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பிரதமர், நமீபியா நாட்டு அரசுடன் பிரதிநிதி நிலையிலான பேச்சுவார்த்தைகளை இன்று பிற்பகல் மேற்கொண்ட பின்னர், எரிசக்தி பாதுகாப்பு, சுகாதாரம், மருந்தியல் பிரிவுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாக உள்ளன.

நமீபியா நாட்டுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு அந்நாட்டின் மிக உயரிய விருது இன்று வழங்கப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்று மாலை பிரதமர் நமீபியா நாட்டின் பாராளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.

முன்னதாக பிரதமர் விடுத்த சமூக வலைதளப்பதிவில் நமீபியா அதிபரை சந்திக்க தாம் ஆர்வத்துடன் இருப்பதாக குறிப்பிட்டார்

நமீபியா நாட்டு பயணத்துடன் தமது 5 நாடுகள் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இன்று தாயகம் புறப்படுகிறார்.

❖❖❖❖❖❖❖

<u>பாலம் விபத்து</u>

குஜராத் மாநிலம் வதோதரா மாவட்டத்தில் பத்ரா அருகே கம்பீரா பாலம் இடிந்து விழுந்த விபத்தில் 9 பேர் இன்று உயிரிழந்தனர்.

ஏராளமானோர் காயமடைந்தனர்.

வதோத்ரா - ஆனந்த் மாவட்டங்களை இணைக்கும் இந்த பாலம் இடிந்து விழுந்ததில் 5 வாகனங்கள் மகி சாகர் ஆற்றுக்குள் மூழ்கின.

உள்ளூர் மக்களும், மாவட்ட நிர்வாகமும், தீயணைப்பு வீரர்களும் இணைந்து மீட்பு நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு.நரேந்திரமோடி உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயும்,

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>அமித்ஷா</u>

ஏழை விவசாயிகளுக்கு கூட்டுறவு துறை பெரிதும் பயனளிப்பதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு மாநாட்டை ஒட்டி குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களை சேர்ந்த கூட்டுறவு அமைப்பின் மகளிர் பிரிவினருடன் இன்று கலந்துரையாடிய அமைச்சர், கூட்டுறவு மாதிரிகள் ஊரக மேம்பாட்டை எவ்வாறு முன்னெடுத்துச்செல்ல முடியும் என்று எடுத்துரைத்தார்.

வெளிப்படைத்தன்மை தற்சார்புநிலை மூலம் இந்தியாவின் அடித்தட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கூட்டுறவு துறையை மேம்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

<u>வேலைநிறுத்தம்</u>

பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், புதிய தொழிலாளர் சட்டங்களை திரும்பப்பெற வேண்டும் உள்ளிட்ட 17 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மத்திய தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ள நாடுதழுவிய வேலை நிறுத்தத்திற்கு தமிழ்நாட்டில் போதிய ஆதரவு காணப்படவில்லை

பேருந்துகள் வழக்கம் போல் இயங்குகின்றன.

வர்த்தக நிறுவனங்களும், பள்ளிகளும் செயல்படுகின்றன.

சென்னை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

நாமக்கல் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள், ஆட்டோ உள்ளிட்டவை வழக்கம்போல் இயங்குகின்றன.

குறைந்த பணியாளர்களை கொண்டு வங்கிகள் செயல்படுகின்றன.

அரியலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள், லாரி, ஆட்டோ உள்ளிட்ட வாகனங்கள் வழக்கம்போல் இயங்குகின்றன.

தமிழகத்தின் மத்திய மாநிலமான திருச்சிராப்பள்ளி உட்பட மாநிலத்தின் இதர மாவட்டங்களில் இந்த வேலை நிறுத்தத்தால் பாதிப்பு எதுவும் இல்லை.

அனைத்து பகுதிகளிலும் பேருந்துகள் சீராக இயங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

கேரள மாநிலத்தில் இந்த வேலைநிறுத்தம் முழுமையாக உள்ளதால், தேனியிலிருந்து மூணாறு, தேக்கடி, கட்டப்பனை உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் பேருந்துகள் எல்லை பகுதிகளிலேயே நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கேரளமாநிலம் திருவனந்தபுரம் செல்லும் பேருந்துகள் தமிழக எல்லைபகுதியான களியக்காவிளை வரை மட்டுமே இயக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

இதேபோல் நீலகிரி மாவட்டத்திலிருந்தும், தென்காசியிலிருந்தும் கேரளாவிற்கும் பேருந்துகள் இயக்கப்படவில்லை.

நாகை, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

மாணவர்கள் சமூக அக்கறையுடனும், தன்னம்பிக்கையுடனும் திகழவேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சி ஜமால் முஹமது கல்லூரி பவளவிழாவின் துவக்க நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், கல்வி, மாணாக்கரின் நிலையான சொத்து என்று எடுத்துரைத்தார்.

வளர்ச்சிக்கு அடிப்படை கல்வி என்பதால் அதற்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தொடர்ந்து முதலமைச்சர் இன்றும் நாளையும் திருவாரூர் மாவட்டத்தில் மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களை ஆய்வு செய்யவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>உதயநிதி</u>

கரூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித்திட்டப் பணிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று ஆய்வுசெய்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இதுகுறித்து துறை அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

திருமாநிலையூரில் புதிய பேருந்து நிலையத்தை இன்றுமாலை அவர் திறந்துவைக்கிறார்.

162 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அவர் வழங்குகிறார்.

நாமக்கல் மாவட்டத்தில் 87 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 139 புதிய திட்டப்பணிகளுக்கு துணை முதலமைச்சர் நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

10 கோடி ரூபாய் மதிப்பிலான 36 பணிகளை துவக்கி வைக்கும் அவர், 2001 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

❖❖❖❖❖❖❖

<u>சேகர்பாபு, நாசர்</u>

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் அதிநவீன புதிய பேருந்து நிலைய பூர்வாங்க பணிகளை மாநில அமைச்சர்கள் திரு.சேகர்பாபு, திரு.நாசர் ஆகியோர் இன்று துவக்கிவைத்தனர்.

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் சார்பில் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 தளங்களுடன் வணிகவளாகம், பயணிகள் தங்கும் அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இப்பேருந்து நிலையம் அமையவுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>கலந்தாய்வு</u>

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளுக்கான இணையவழி கலந்தாய்வு தற்போது நடைபெற்று வரும் நிலையில், அரசு பள்ளி மாணாக்கருக்கான ஏழரை சதவிகித உள் ஒதுக்கீடு, மாற்றுத்திறனாளி, விளையாட்டு பிரிவினர், ராணுவ வீரர்களின் வாரிசுகள் உள்ளிட்ட சிறப்பு பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு நாளை மறுநாள் வரை நடைபெறுகிறது.

பொதுப்பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு வரும் 14-ம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 19-ம் தேதிவரை நடைபெறும்.

சென்னை அண்ணா பல்கலைகழகத்தின் கீழ் செயல்படும் 445 அரசு, தனியார் பொறியியல் கல்லூரிகளில் **BE., B.Tech** படிப்புகளுக்கு இரண்டு லட்சம் இடங்கள் இக்கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன.

❖❖❖❖❖❖❖

## <u>B.Ed.,</u>

தமிழகத்தில் அரசு கல்வியியல் கல்லூரிகளில் **B.Ed.,** படிப்பிற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க இன்று கடைசிநாளாகும்.

தரவரிசை பட்டியல் வரும் 18-ம் தேதி வெளியிடப்படுகிறது.

கலந்தாய்வு வரும் 21-ம் தேதி முதல் 25-ம் தேதிவரை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

<u>ராணிப்பேட்டை – வாய்ஸ்</u>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் 48 குழுக்கள் மூலம் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருவதாக மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் திரு.திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

கோவில்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவில் தெப்ப திருவிழாவின் முக்கிய நிகழ்வான வெண்ணைத்தாழி உற்சவம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

குழந்தை கண்ணனாக வீதி உலா வந்த ராஜகோபாலனின் வெண்ணை குடம் ஏந்திய கோலத்தை பக்தர்கள் தரிசித்து தரிசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

இந்திய இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையிலான நான்காவது 20-20 கிரிக்கெட் போட்டி **Manchester**-இல் இன்று நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 2-1 என்ற கணக்கில் தற்போது முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

இத்தாலி சேலஞ்சர் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - தைவானின் ச்சுன் சின்-னை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖